204—

குளித்தலை அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்துதல்

*35691—திரு. அ. பாப்பா சுந்தரம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்தவும் மற்றும் படுக்கை வசதியை அதிகரிக்கவும் அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கி அமைப்பது மற்றும் படுக்கை எண்ணிக்கையை அதிகப்படுத்துவது ஆகியவை அரசின் நிதிநிலைமைக்கு ஏற்ப செயல்படுத்தப்படும்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை ஒரு நகராட்சியாக விளங்கிக் கொண்டிருக்கிறது. நாகப்பட்டினம்-கூடலூர் சாலையின் மையத்தில் குளித்தலை அமைந்திருக்கிறது. அதுபோல், குளித்தலை - முசிறி பாலம் கட்டிய பிறகு தென் மாவட்டங்களிலிருந்து வருகின்ற தனியார் வாகனங்களாக இருந்தாலும் சரி, லாரிகளாக இருந்தாலும் சரி, அந்த வழியே போகின்றன. ஆதலால் விபத்துகள் அதிகமாக நேர்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அங்கே இரத்த சேமிப்பு வங்கி இல்லாததால், மருத்துவ வசதி இல்லாத காரணத்தால், அங்கிருந்து வெளியே 40, 50 கிலோ மீட்டர் தூரம் அனுப்பும்போது மரணம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே குளித்தலையில் இரத்த சேமிப்பு வங்கியை ஏற்படுத்துவதோடு, படுக்கை வசதியையும் அதிகமாக செய்து எப்போது தரப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி வசதிக்கேற்ப செய்யப்படும் என்று தெரிவித்தேன். 44

படுக்கைகள் இப்போது இருக்கின்றன. எனவே படுக்கைகளை அதிகப்படுத்தும் நோக்கம் சம்பத்திலே எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பு இல்லை. வங்கியை நாம் அங்கே ஏற்படுத்துவது என்பது சிரமமாக இருந்தாலும் கிடைக்கின்ற குருதியை உடனடியாக அந்த நோயாளிகளுக்குச் செலுத்துகின்ற வகையிலே அந்த ரத்தம் சரிதானா என்பதை பரிசோதிப்பதற்காக தேவையான உபகரணங்களை இன்னும் சில தினங்களுக்குள்ளே அந்த மருத்துவ மனைக்குத் துறையினுடைய சார்பாக அனுப்ப இருக்கிறோம். எனவே சேமித்து வைத்துக்கொள்வதற்கான வாய்ப்பு இல்லை என்றாலும் நோயாளிகள் வருகின்றபோது அவர்களுக்கு ரத்தம் கொடுப்பதற்காக யாராவது வந்தால் உடனடியாக பரிசோதித்து அந்த ரத்தத்தை எடுத்து அப்போதே செலுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படுத்துகின்ற வகையிலே இப்போது டெம்பரரியாக இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது. எதிர்காலத்திலே நிரந்தரமான பிளட் பேங்க் கொடுப்பதற்கு நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகமாக ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. இருந்தாலும் அங்கே ஆப்பரேஷன் தியேட்டர் இருக்கிறது. ஆப்பரேஷன் செய்வதற்குச் சரியான ஆப்பரேஷன் செய்கின்ற மருத்துவர்களும், எம்.எஸ். படித்த டாக்டர்களும் இருக்கிறார்கள். ஆனால் அங்கே குளிர்சாதன வசதி இல்லாத காரணத்தினால் பல பெரிய ஆப்பரேஷன்ஸ் நடைபெறுவதற்கு தடையாக இருக்கிறது. அந்த இடத்திலே ரத்த சேமிப்பை ஏற்படுத்தி குளிர் சாதன வசதிகளை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே சேர்ப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்கா மருத்துவ மனைகளை ஸ்ட்ரெங்தன் செய்வதற்காக சில திட்டங்களை நாங்கள் வகுத்துவைத்து இருக்கிறோம். நாளையதினம் டிமாண்டிலே அதைப் பற்றி சொல்ல இருக்கிறோம். அது வருகிறபோது. ஓரளவிற்கு இந்த வசதிகள் அங்கே கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 205, டாக்டர் எம். பி. சேகர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.